# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இத்தாலியிலுள்ள போலோக்னாவில் 16.04.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

இன்று அல்லாஹ்வின் அருளால் இத்தாலியில் போலோன் பகுதியைச் சேர்ந்த ஸான்பிட்ரோ நகரில் குத்பா கொடுக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. உலகில் இந்த பகுதியிலிருந்து முதன்முறையாக LIVE குத்பா ஒளிபரப்பாகிறது. ஓரளவுக்கு மக்கள் இருந்தபோதிலும் நீண்ட காலம் வரை அவர்களுக்கு தொழுவதற்கு ஓர் இடம் இல்லாமல் இருந்தது. இங்கு ஜமாஅத் இருந்தபோதிலும் நமக்கு ஒரு சென்டர் இல்லாமல் இருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு இரண்டு இடம் வாங்குவதற்கான வாய்ப்பினை இறைவன் வழங்கினான். அல்லாஹ் உங்களுக்கு ஒரு பள்ளிவாயிலைக் கட்டுவதற்கும் கூட வாய்ப்பினை வழங்குவானாக. இப்போது சில தடைகள் உள்ளன. இப்பகுதியின் மக்கள் தரப்பிலிருந்து இஸ்லாத்தின் மீது எதிர்ப்பு உருவானதால் அல்லது சில முஸ்லிம் பிரிவுகளின் சில செயல்களினால் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தி வைத்திருப்பதாலும் இம்மக்களின் உள்ளம் இஸ்லாமிய எதிர்ப்பினால் நிறைந்துள்ளது. முஸ்லிம்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்த அவர்களே வாய்ப்பை தேடிக் கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களின் ஒரு பிரிவினரின் செயலால் இஸ்லாத்திற்கு எதிராக பேசுவதற்கும், எதிர்ப்புத் தீயை ஊதி விடவும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

அல்லாஹ் அருள்புரிந்து இத்தடைகளை அகற்றுவானாக. இங்கு மட்டுமல்ல; ரோம் நகரில் கூட நமக்கு பிரச்சார நிலையமும், மஸ்ஜித் கட்டவும் வாய்ப்பினை வழங்குவானாக. இந்த இஸ்லாமிய எதிர்ப்பு பிரச்சாரத்திற்கு இடையிலும் கூட ஐரோப்பாவின் பல நகரங்களிலும் நாடுகளிலும் அல்லாஹ் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு மஸ்ஜித் கட்டுவதற்காக வாய்ப்பினை வழங்கிக் கொண்டிருக்கிறான். வழியைத் திறந்து தந்துள்ளான். சில இடங்களில் இடம் தருவதற்கு மறுத்தும் விடுகிறார்கள். அதன் பிறகு அல்லாஹ் நாம் எதிர்பார்த்ததை விட சிறந்த வழியினை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறான். இந்த உண்மை இஸ்லாத்தைப் பரப்பும் வழிவகைகளை அல்லாஹ் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றான். இதில் நமது திறமை ஒன்றுமில்லை. அல்லது நமது முயற்சியினால் கிடைத்ததும் அன்று. நான் கூறியது போன்று இந்த சென்டர் உருவாகும் போது கூட எதிர்ப்பு அதிகமானது. பிறகு கவுன்சிலர் மற்றும் இந்தப் பகுதியின் மக்களுக்கு ஜமாஅத் மற்றும் இஸ்லாத்தின் போதனைகளைக் குறித்து வெளிச்சமூட்டும் வாய்ப்பு கிடைத்தது. பிறகு இப்பகுதியின் நமது அக்கம் பக்கத்தின் பல கவுன்சிலர்களும் நமக்கு ஆதரவு தெரிவித்தனர். இப்பகுதியின் மேயர் நேற்று வந்தார்.

இப்பகுதியில் ஜமாஅத்தின் ஒரு மையம் உருவாக்குவதில் இனிமேல் எந்தத் தடையும் இருக்காது என்று அவர் கூறினார். நமது அருகில் வசிப்போருக்கு இங்கு நமது சென்டர் உருவாவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை. அவர்கள் நம்மை அமைதியை விரும்புபவர்கள் என்று கருதுகின்றனர். எவ்வாறிருப்பினும் இப்பகுதியில் வாழும் அஹ்மதிகளுக்கு இங்கு நடந்த விஷயங்கள் பெரும் பொறுப்பைச் சுட்டிக் காட்டுகின்றன. நான் இங்கு என்று கூறியதன் பொருள், இந்த நாட்டில் வாழும் அஹ்மதிகள் அனைவரையும் கூறுகிறேன். அவர்கள் நாட்டின் எப்பகுதியில் வேண்டுமானால் வசிக்கலாம். ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். முஹம்மதிய மஸீஹை நம்புபவர் அவரது அடிமைகளுள் ஒருவர் ஆவார். அவர்கள் இந்தப் பகுதியில் வாழ்கின்றார்கள். இதன் ஒரு பகுதியில் கிறித்தவர்களின் தலைமையகம் உள்ளது. போப்பின் ஆட்சியை நிறுவ முயற்சி செய்து வருகிறார்கள். போப்புக்கு ஒரு கண்ணியம் இருக்கிறது. ஐரோப்பாவில் வாழும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் போப்பை நம்புபவர்களான கத்தோலிக்கர்கள் உள்ளனர். இப்போது அல்லாஹ்வின் தக்தீருக்கேற்ப முஹம்மதிய மஸீஹ் தோன்றி முழு உலகையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பாதத்தின் கீழ் கொண்டு வரும் பணியை செய்ய வேண்டியுள்ளது. இப்பணி ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பும் ஆகும்.

தற்போது இங்கு நமது முபல்லிக்கும் கிடையாது. சுவிட்சர்லாந்தில் இருந்து நமது முபல்லிக்குகள் வந்து செல்கின்றனர். இங்கேயே ஒரு முபல்லிக்கை நியமிப்பதற்கு முயற்சி நடந்து வருகிறது. எனவே ஒவ்வோர் அஹ்மதிக்கும் பொறுப்பு உள்ளது. தமது நடைமுறையின் மூலம் அரசுக்கு ஒரு நல்லெண்ணம் உருவாக வேண்டும். ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் சட்டத்தை மதிப்பவர்கள்; எனவே அவர்களின் இலக்கும் நிச்சயமாக உயர் தகுதி வாய்ந்ததாகவே இருக்கும் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். அனுமதி கிடைப்பதில் நமக்கு எந்த தடையும் இருக்கக் கூடாது. ஒவ்வோர் அஹ்மதியும் அஹ்மதிய்யத்தின் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அதன் மூலம் ஜமாஅத்தை இங்கு உறுதியாக வேரூன்ற வைக்க முடியும். முபல்லிக் வந்த பிறகு உங்கள் பொறுப்பு இங்கு குறைந்து விடாது. மாறாக, நல்ல நடைமுறையைக் காட்டுவதில் உங்கள் கடமையை இன்னும் அதிகமாக்க வேண்டும். ஓரிரு இடங்களில் மட்டுமல்ல. முழு நாட்டிலும் நமது மஸ்ஜிதுகள் பரவ வேண்டியதுள்ளது. இன்று மூஸாவின் மஸீஹின் தலைமையகமாக இருக்கின்ற இந்த நாட்டில் முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கட்டுமாக. இது சாதாரண வேலையன்று; பெரிய வேலையாகும். நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த வாக்குறுதியை கவனத்தில் வைத்தால் கிலாஃபத்தே அஹ்மதிய்யாவுடன் விசுவாசமாக இருந்தால் இன்றில்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள் இந்த நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாகி விடுவீர்கள். நீங்கள் இல்லா விட்டால் உங்கள் குழந்தைகள் கண்டிப்பாக இந்த காட்சியை காண்பார்கள்.

கிறித்தவம், நூற்றுக்கணக்கான ஆண்டுகளின் கடுமைகளை சகித்த பிறகுதான் இங்கு பரவியது. தவ்ஹீதுக்கு பதில் திரித்துவத்தை எடுத்துக் கொண்டு பரவியது. ஆனால் அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாம் திரித்துவத்தை மீண்டும் தவ்ஹீதாக மாற்றி நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிறகு தவ்ஹீதை நிலைநாட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியை இந்த நாட்டில் உயர்த்த முயற்சி செய்ய வேண்டும். இன்ஷா அல்லாஹ். உலகத்தில் இந்த தூதுச் செய்தியைப் பரப்ப முஹம்மதிய மஸீஹின் அடிமைகள் தியாகங்களை செய்து கொண்டே செல்வர். நாம் தக்வாவில் அடியெடுத்து வைக்கும் போதுதான் உலகை அந்நிலையில் காண முடியும். அப்போது நாம் நமது பிறப்பின் நோக்கத்தை புரிபவர்களாவோம். நமது நிலைகளை மாற்ற வேண்டும். மார்க்கத்திற்கு உலகை விட அதிக முன்னுரிமை வழங்க வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு, நேசம், சகோதரத்துவத்தின் முன்மாதிரியாக வேண்டும். ஜமாஅத் அமைப்புடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் விசுவாசமான தொடர்பை ஏற்படுத்த வேண்டும். மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த வாக்குறுதியை எப்போதும் நம்முன் வைக்கும் போது அல்லாஹ் அவனது ரஸூலின் ஆட்சியை உங்களிடம் ஏற்படுத்தும் போது நமது இலக்கு நிறைவேறும். பாகிஸ்தானிய மக்கள் அந்நாட்டில் ஏற்பட்ட பிரச்சனைகளால் இங்கு வந்துள்ளனர். இங்கு மார்க்க ரீதியாக ஒரு நிம்மதி உள்ளது. பெரும்பாலாரின் பொருளாதார நிலையை அல்லாஹ் மேன்மைப்படுத்தி உள்ளான். நீங்கள் இறைவனது நன்றி உடைய அடியாராக ஆகி விடுங்கள். தக்வாவின் படி நடக்கும் போதுதான் நன்றி உடைய அடியார் ஆக முடியும். பாகிஸ்தான் அஹ்மதிகளுக்குப் பிறகு இங்கு அதிக எண்ணிக்கையில் வாழ்பவர்கள் ஆஃப்பிரிக்க அஹ்மதிகள் ஆவர். அதிலும் கானா நாட்டைச் சேர்ந்த அஹ்மதிகள் வாழ்கின்றனர்.

பிறகு மராகஸ் மற்றும் தீபகற்பங்களைச் சேர்ந்த அஹ்மதிகளும் இங்கு குடியேறி உள்ளனர். அம்மக்களையும் அல்லாஹ் உலகரீதியாக மிகச் சிறந்த நிலையில் வைத்துள்ளான். பைஅத் உடன்படிக்கையை கவனத்தில் வைப்பது உங்கள் மீது கடமையாகும்.

ஆப்பிரிக்க அஹ்மதிகள் பலருக்கு தமது மூதாதையர்களின் திரித்துவ கொள்கைகளை விட்டு இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. உங்களிடம் இப்போது அல்லாஹ் இந்த மார்க்கத்தில் சேர்ந்த பிறகு ஒரு பொறுப்பை ஒப்படைத்துள்ளான். சிறந்த முறையில் கிறித்தவருக்கு தவ்ஹீதின் தூதுச் செய்தியை கொண்டு சேருங்கள். பிறகு இந்த பொறுப்பு இன்னும் கூட அதிகமாகிறது. பொருளாதார ரீதியில் அல்லாஹ் உங்களை நல்ல நிலையில் வைத்துள்ளான். மேலும் அரபு நாட்டிலும், தீபகற்பங்களிலும் இருந்து இங்கு வந்து குடியேறி இருப்பவர்களுக்கும் பொறுப்பு உள்ளது. முஹம்மதிய மஸீஹின் மூலம்

உங்களுக்கு கிடைத்த பொறுப்பு உள்ளது. முஹம்மதிய மஸீஹின் மூலம் உங்ளுக்கு கிடைத்த இந்த அருள் உங்கள் குழந்தைகளுக்கும் கிடைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள். ஒரு உண்மையான முஸ்லிம் தனக்காக விரும்புவதை தனது சகோதரருக்காகவும் விரும்ப வேண்டும்.

எனவே உங்கள் உறவினர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர், உண்மை தாசர் உடைய தூதுச் செய்தியை கொண்டு சேருங்கள். அப்போதுதான் நீங்கள் உண்மையான அஹ்மதிகள் என்ற ஹக்கை நிறைவேற்ற முடியும்.

மொராக்கஸ் தீபகற்பங்களின் வாழும் அஹ்மதிகளுக்கு அல்லாஹ் கனவுகள் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய உருவத்தைக் காட்டி அஹ்மதிய்யத்தின் உண்மைத்தன்மையைக் காட்டி அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு அளித்துள்ளான். அதனை அவர்கள் கூறியுள்ளனர். உங்களது ஏதாவது ஒரு நன்மையின் காரணத்தால் அல்லாஹ்வின் இந்த அடையாளம் உங்கள் மீது வெளிப்பட்டுள்ளது. இது அல்லாஹ்வுடைய கருணையாகும். இதற்கு பதிலாக முழு வாழ்வு முழுவதும் முயற்சி செய்தால்தான் பரிகாரம் செய்ய முடியும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். **ஹல்ஜஸாஅல் இஹ்ஸானி இல்லல் இஹ்ஸான் – கருணைக்கு பிரதிபலன் கருணையன்றி வேறென்ன (55:61)** சிறு வயதில் பெற்றோர் நம்மை பராமரித்ததற்காக நாம் நமது பெற்றோர் காட்டிய கருணையை நினைவில் கொண்டு அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று நமக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. ஹதீஸில் வருகிறது. பெற்றோரின் உபகாரத்திற்கு உங்களால் ஒருபோதும் கைமாறு செய்ய இயலாது. இறைவன் எல்லாரையும்விட அதிகமாக தமது நல்லடியார்களின் மீது கருணை காட்டுபவனாவான். அதுமட்டுமின்றி தமது எல்லா அடியார்களின் மீது கருணை காட்டுபவனாவான். ரஹ்மானிய்யத் என்ற பண்பின் மூலம் இது அவன் செய்த பொதுவான பேருபகாரம் ஆகும். இந்த உபகாரத்தை அவன் ஒவ்வொரு படைப்பினத்துக்கும் செய்கிறான். நல்ல இயல்புடையோருக்காக அவனது படைத்து பராமரிக்கும் செயலுக்கு நன்றி செலுத்தியவாறு (ஸஜ்தாவில் வீழ்ந்த பிறகு) தலையை உயர்த்தவே நல்லியல்பு கொண்டோருக்கு அவகாசம் கிடைக்காது. அதற்கு மேலும் அவன் மனிதனுக்கு வழிகாட்டுகின்றான். நெருப்பில் வீழ்வதில் இருந்து காப்பாற்றுகிறான். தனது சிறப்பான அருளால் வழிகாட்டுகிறார் எனில் அது எவ்வளவு பெரிய பேருபகாரம்? இதற்கு மனிதன் எவ்வாறு நன்றி செய்ய முடியும்?

இறைவன் தந்தவற்றிற்கு திருப்பி பேருபகாரம் செய்வது சாத்தியமே இல்லை. இவ்வகையில் ரஹ்மானின் அடிமைக்கு இருப்பது ஒரே ஒரு வழிதான். உயிருள்ளவரை அவனது நிஃமத்துகளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு நன்றி செலுத்திக் கொண்டும் இருக்க வேண்டும். ஒரு அஹ்மதியின் வேலை அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்ப முயற்சி செய்ய வேண்டும். எனவே இதற்கு அரபியா மற்றும் தீபகற்பங்களில் வாழும் அஹ்மதிகளிடம் கூறுகிறேன். அல்லாஹ்வுடைய இந்த உபகாரத்துக்கு உங்களால் பிரதிபலன் வழங்க இயலாது. ஆனால் நன்றி செலுத்தும் பொருட்டு உங்கள் உறவினர்கள் அண்டை அயலாருக்கு அஹ்மதிய்யத் என்ற உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொடுத்துக் கொண்டே செல்லுங்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த தூதுச் செய்தி இப்போது குறிப்பிட்ட ஆப்பிரிக்கா, தீபகற்பம், அரேபியா ஆகியோருக்கு மட்டுமல்ல. பங்களாதே**ஷி**ல் இருப்பவர்களும் நமது அஹ்மதிகள்தான். எல்லாருக்கும் தான் கூறுகிறேன். எனவே ஒவ்வொரு இனத்தாரும் இந்தப் பணியை முழுமையாக செய்தாலும் இறைவனது உபகாரத்துக்கு பிரதிபலன் செலுத்த இயலாது. படைத்து பரிபாலிப்பவனும் எல்லாவற்றிற்கும் உரிமையாளனும் ரப்பும் ஆகிய இறைவனின் பேருபகாரத்திற்கு எப்படி பிரதிபலன் செலுத்த முடியும்? நாம் அவனது கட்டளையின்படி அமல் செய்வதன் மூலம் அவனது திருப்தியையும் மகிழ்ச்சியையும் பெறுவோம். நிபந்தனை என்னவென்றால் நமது ஒவ்வொரு சொல்லும் செயலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். எனவே இக்காலத்தின் இமாமும், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரும், வாக்களிக்கப்பட்ட மஸீஹுமாகிய அவர்களை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு தந்தது

அல்லாஹ் நம்மீது செய்த பேருபகாரமாகும். நமக்கு இறைவன் கொடுத்த இந்த வாய்ப்புதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டவாறு அவர்களது கட்டளையை நிறைவேற்றுபவர்கள் ஆகியுள்ளோம்.

அல்லாஹ் முன்னோர்களின் மீது செய்த பேருபகாரத்தை பின்னவர்களாகிய நமக்கும் செய்துள்ளான். நமக்கு இந்த உபகாரத்தை நினைவூட்டியவாறு அல்லாஹ் கூறுகிறான்.

**பலில்லாஹு யமுன்னு அலைKகும் அன்ஹதாKகும் லில்ஈமானி இன்Kகுன்தும் ஸாdதிகீன்** - நீங்கள் உண்மையாளர்களாயின், அல்லாஹ் உங்களுக்கு (உண்மையான) நம்பிக்கையின்பால் வழிகாட்டியிருப்பதில் அவன் உங்களுக்கு அருள் செய்துள்ளான். (49:18)

ஈமானை ஏற்றுக் கொள்வது இறைவனது பேருபகாரங்களுள் ஒன்றாகும். ஈமானின் வளர்ச்சி பெறுவதுதான் இந்த உபகாரத்திற்கு பிரதி உபகாரமாகும். இந்த முயற்சியில் நீர் உண்மையான முஃமினாக அடியெடுத்து வைப்பதற்கு உள்ளத்தில் தக்வா உருவாக வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப நமது பிறப்பின் நோக்கத்தை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதனைப் பற்றி இறைவன் கூறுகிறான்: நான் ஜின்களையும் மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன்.

இதுதான் படைக்கப்பட்டதன் நோக்கமாகும். இபாதத் செய்யும் அடியான் மட்டும் தான் உண்மையான இபாதுர் ரஹ்மான் - ரஹ்மானின் அடியார்கள் ஆக முடியும். ஐவேளை தொடர்ந்து தொழுவதுடன் திக்ரே இலாஹியும் இபாதத் ஆகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்யும் எல்லா வேலையும் இபாதத் ஆகி விடுகிறது. ஆனால் தொழுகை எல்லா இபாதத்துகளின் ஆணிவேர் ஆகும். எனவே ஒரு முஃமின் ஆவதற்கு அதற்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்தவாறு உங்கள் தொழுகையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இதனை ஒரு சென்டர் ஆக்கி உள்ளீர்கள். பிறகு ஒரு மஸ்ஜித் கட்டுவதற்கும் முயற்சி செய்யப்படும் இன்ஷா அல்லாஹ். இதுபோன்று ரோமில் இருந்து வந்த சில அஹ்மதிகளும் என்னிடம் துஆவுக்காக விண்ணப்பித்தார்கள். மஸ்ஜித் கட்டுவதற்கான தகுதி எங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று துஆ செய்யுமாறு கூறினார்கள். அல்லாஹ்வின் முன் குனிபவர்களாக நீங்கள் உங்களை ஆக்கிக் கொள்வது தான் துஆக்கள், விருப்பங்கள், பெரிய குறிக்கோள்கள் ஆகியவை நிறைவேறுவதற்கான ஒரே வழியாகும். பிறகு உங்கள் நல்ல இலக்குகளை அடைவதற்கான வழிகளை அல்லாஹ் திறந்து கொண்டே செல்வான். உங்கள் இபாதத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. எல்லா இபாதத்துகளின் சத்தாக இருக்கக்கூடிய இபாதத்தின் பக்கம் கவனம் இல்லையெனில் ஐந்து நேரத் தொழுகையின் பக்கம் கவனம் இல்லையெனில் இந்த சென்டரின் கட்டிடம் அல்லது மஸ்ஜித் உங்கள் ஈமானை அதிகப்படுத்தப்போவதில்லை. நான் தப்லீக் செய்வது பற்றியும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பது பற்றியும் கூறினேன். இதற்கும் துஆவே வழியாகும். தப்லீகின் விளைவும் துஆவின் மூலமே வெளிப்பட வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நமது வெற்றி துஆவைக் கொண்டே கிடைக்கக்கூடியதாகும். எனவே வெற்றியைப் பெறுவதற்கு துஆவின் மூலாதாரமாக அல்லாஹ் நியமித்துள்ள தொழுகையை நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் சூரா பக்கராவின் 4-வது வனத்திலேயே மறைவானவற்றை ஈமான் கொண்ட பிறகு தொழுகையின் பக்கம் கவனமூட்டியுள்ளான். தக்வாவின் படித்தரத்தை முழுமைப்படுத்துவதற்கு தொழுகையை நிலைநாட்ட முயற்சி செய்ய வேண்டும்.

சந்திப்பின் போது என்னை பார்த்த சிலர் பெரும் பெரும் தியாகங்களை செய்த குடும்பத்தினர்கள் ஆவர். ஆனால் தொழுகையில் சோம்பேறிகளாக உள்ளனர். நாம் தொழுகையில் சோம்பேறிகள் என்ற

உணர்வு அவர்களுக்கே இருக்கவும் செய்கிறது. அதற்காக துஆ செய்யுமாறும் கூறுகின்றனர். ஆனால் ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும் போதுதான் துஆவும் கூட வேலை செய்கிறது.

ஒருபுறம் தொழுகையின் அழைப்புக் குரல் கேட்கிறது. பாங்கிற்கு மதிப்பளித்து பள்ளிவாயிலுக்குச் செல்வதற்கு பதில் தமது தொழிலில் மூழ்கி விட்டால் துஆவுக்கு விண்ணப்பிப்பது நஃப்ஸின் ஏமாற்றுதலாகும். நன்மையில் நிலைநிற்பதற்காக யாரிடம் துஆ செய்யுமாறு கூறுகிறீர்களோ அவரையும் ஏமாற்றுவதாகும். இது அல்லாஹ்வை ஏமாற்றுவதாகும். இதிலிருந்து வெளி வாருங்கள். நிய்யத்தில் நேர்மை இருந்தால் – செயலில் அடியெடுத்து வைப்பதற்கு முன் உங்கள் நஃப்ஸ் மற்றும் ஷய்த்தானுக்கு எதிராக ஜிஹாது செய்யுங்கள். இவ்வாறு முயற்சி செய்தால் பிறகு தொழுகை உங்களுக்கு எல்லாவற்றையும் விட முன்னுரிமை பெற்று விடும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனுக்கு உள்ள எல்லா அக மற்றும் புற ஆற்றல்களும் திறன்களும் இறைவனுடைய அன்பு, ஞானம் ஆகியவற்றை பெறுவதற்காகவே வழங்கப்பட்டவையாகும். இதனால் தான் மனிதன் ஆயிரக்கணக்கான தொழிலுக்கு நடுவில் மார்க்கத்தில் கிடைக்கின்ற மகிழ்ச்சியை இறைவனிடமிருந்தே தவிர வேறு எங்கும் பெற முடிவதில்லை. பெரும் செல்வம், பதவி, வியாபாரம், அரசாட்சி எல்லாம் பெற்றும், பெரும் தத்துவஞானி என்று அழைக்கப்பட்டும் கடைசியில் உலகத்தால் சூழப்பட்டு வெறும் ஏக்கத்துடன் உலகை விட்டு செல்கிறார். அவரது உள்ளம் உலகத்தின் ஈடுபாட்டின் காரணமாக அவரை குற்றம்சாட்டிக் கொண்டிருக்கிறது. தந்திரம், சூழ்ச்சி, விலக்கப்பட்ட செயல்கள் செய்யும் போது அவரது மனசாட்சி அவருடன் ஒத்துப்போவதில்லை. எனவே ஒவ்வொருவரும் தமக்குள் ஆய்வு செய்யட்டும். உலகின் குரல் அவரை நிம்மதியிழக்கச் செய்கிறது. ஓர் அஹ்மதிக்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பை அல்லாஹ் வழங்கியுள்ளான். அவரது ஏதாவது நன்மையின் காரணத்தால் ஜமாஅத்துடன் அவரை இணைத்து வைத்துள்ளான். அவரது மனசாட்சி அவரை மீண்டும் மீண்டும் படைக்கப்பட்ட நோக்கத்தை அடையுமாறு கூறுகிறது. இதன் காரணத்தால் அஹ்மதிகள் சில வேளை மிகவும் நிம்மதியிழந்தவாறு கடிதம் எழுதுகின்றனர்.

நான் ஏற்கனவே கூறியது போன்று சந்திப்பின் போது துஆ செய்யுங்கள். நாங்கள் தொழுகையில் நிலைநிற்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் தமது பிறப்பின் நோக்கத்தை அடைவதன் பக்கம் கவனடன் இருக்க நல்வாய்ப்பு வழங்குவானாக. இபாதத்தின் வளர்ச்சி மற்றும் பிற கடமைகளை செய்வது அடியார்களின் கடமையைச் செய்வதன் பக்கம் கவனம் ஏற்பட்டு வரும். அல்லாஹ்வுடைய கருணையால் நன்றி செலுத்துவதின் பக்கம் கவனம் ஏற்படும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு தமது ஈமானின் நிலையை ஒருவர் உயர்த்தவில்லை எனில் தமது உடன்படிக்கைகளில் இருந்து அவர் விலகியவராவார். அத்துடன் இறைவனின் பேருபகாரத்தையும் மறுப்பவராவார்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

**நீங்கள் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் இருந்தீர்கள். பின்னர் அவன் உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். (3:104)**

இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்துடன் இறைவன் நம்மை சேர்த்துள்ளான். இன்று பாருங்கள். இஸ்லாமிய உலகில் உம்மத்தே முஸ்லிமாவைப் பராமரிக்க ஒரு கிலாபஃபத் தேவை என்று மிகவும் உற்சாகத்துடன் குரல் எழுப்பப்படுகிறது.. அல்லாஹ்வும் தனது வாக்குறுதிக்கேற்ப கிலாஃபத்தை ஏற்படுத்தியுள்ளான். பெரும்பாலான முஸ்லிம்கள் இந்த கிலாஃபத்தை ஏற்றுக் கொள்ள தயாராக இல்லை. கிலாஃபத்தே ராஷிதாவுக்கு பிறகு ஒரு நீண்ட காலம் மக்கள் கிலாஃபத்தை விட்டு விலகி உள்ளார்கள். இது முஸ்லிம்களின் செயல்களின் விளைவாகும் என்பதை அவர்கள் புரியவில்லை.

நீங்கள் அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடியுங்கள். பிரிந்து போய் விடாதீர்கள் என்ற கட்டளைக்கு கட்டுப்படாததன் விளைவாகும். எனவே பிரிவினை ஏற்பட்டால் அதன் விளைவு தக்வாவை விட்டு விலகுவதேயாகும். ஆனால் இறைவன் உண்மையான வாக்குறுதி உடையவனாவான். அவன் இஸ்லாத்தின் கடைசி வெற்றிக்காக ஆகரீன்களை அவ்வலீன்களுடன் இணைத்து இந்த வெற்றிக்கான ஏற்பாட்டினை செய்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று இறுதி காலத்தில் வருவதாகக் கூறிய அந்த மஸீஹை ஏற்றுக் கொள்ளாமல் அந்த மஸீஹுடன் உங்களை இணைக்காமல் கிலாஃபத்தின் பரக்கத்துகளை பெற முடியாது.

எனவே இதன் அடிப்படையில் நான் உங்களிடமும் கூறுகிறேன். அல்லாஹ் உங்கள் மீது கருணை காட்டியவாறு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு கிலாஃபத்தின் நிழலின் கீழ் கொண்டு வந்து நெருப்பில் வீழ்வதிலிருந்து காப்பாற்றியுள்ளான். தக்வாவில் நிலைநின்றவாறு இந்த கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடியுங்கள். எவருடைய சுய பலத்தாலும், சுய நன்மையாலும் இந்த கயிற்றைப் பற்றிப் பிடிக்க முடியாது. மாறாக, அல்லாஹ்வுடைய உதவியும் தேவை. அல்லாஹ்வின் உதவியைப் பெற வேண்டும் என்றால் அவன் முன்னால் குனிய வேண்டிய தேவை உள்ளது.

ஜமாஅத்தின் அருளைப் பெறவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த நிரந்தரமாக நிலைத்திருக்கும் ஜமாஅத் அமைப்பிலிருந்து பலன் பெறவும் தக்வா ஒரு நிபந்தனையாகும். அல்லாஹ், கிலாஃபத்திலிருந்து பயன் பெறுவதற்காக ஈமான் மற்றும் நற்செயல்களை நிபந்தனையாக வைத்துள்ளான். இறைவனின் பயம் இருந்தால் ஈமான் உறுதியாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முழுமையான கட்டுப்படுதலை நமது தோளில் ஏற்றுக் கொள்ளத் தயாராகும் போதுதான் நற்செயல்களின் பக்கம் கவனம் ஏற்படும்.

**இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:**

**நம்பிக்கை கொண்டோரே! இறைபக்தியைஅதன் எல்லா நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்க. நீங்கள் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருக்கின்ற நிலையில் மட்டுமே, உங்களுக்கு மரணம் வர வேண்டும். (3:103)**

இந்த இறுதிபட்ச எல்லையை அடைவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு உண்மையான முஸ்லிமின் கவனம் குறிப்பாக இதன் பக்கம் திருப்பப்பட்டுள்ளது. வாழ்வின் நோக்கத்தை தக்வா இல்லாமல் அடைய இயலாது. இபாதத் செய்வதற்காக நீங்கள் செய்யும் முயற்சிகள் அடியார்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள், காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதாக செய்யும் வாதம், கிலஃபத்தோடு விசுவாசத்துடன் இருப்பதாக செய்யும் அறிவிப்பு அல்லாஹ்வுக்கும் ரஸுலுக்கும் கட்டுப்படுவதாக வாதம் செய்தல் இவை அனைத்தும் உள்ளத்தில் தக்வா இருக்கும் போது உண்மையாகும்.

ஓர் உண்மையான மூஃமின் ஸாலிஹான அமலுக்கு மாற்றமானதை செய்து அல்லாஹ்வினால் பிடிக்கப்படுவதற்கு பயப்படுவார். அல்லாஹ்வுடைய ரஹ்மத் மிகவும் பரந்தது என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவனுக்கு முன்னால் குனிந்து அவனிடம் துஆ கேட்பேன். அவனது அருளைக் கேட்பேன்.

அல்லாஹ் பரந்த கருணையை ஈர்க்க அது காரணமாக இருக்கும். ஒரு முஃமினுக்கு இறை விஷயத்தில் கவனம் இருக்கும். ஒன்று அல்லாஹ் எல்லா ஆற்றல்களும் வாய்ந்தவன். இறைவனை எல்லா ஆற்றல்களுக்கும் இறைவன் என்று நம்பும் போது பிறகு நமது அடியும் முன்னே எடுத்து வைக்கப்படும். அவனது கட்டளையின்படி அமல் செய்ய முயற்சி செய்யப்படும். தவ்வாவின் உண்மையான கருத்தை புரிவதில் கவனம் ஏற்படும்.

ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எப்போதும் இறைவனது கட்டுப்பட்ட அடியார்களாக இருங்கள். ஒருபோதும் அவனுக்கு மாறு செய்யாதீர்கள். எப்போதும் அவனுக்கு நன்றி செலுத்துங்கள். அவனுக்கு நன்றிகேடு ஒருபோதும் காட்டாதீர்கள். எப்போதும் அவனை நினைவில் கொள்ளுங்கள். ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

இந்த போதனையின்படி நாம் அமல் செய்யும் போது நமது தொழுகையும் நிலைநிற்கும். நாம் அல்லாஹ்வின் நன்றியுள்ள அடியாரும் ஆவோம். அவனது அடியார்களின் உரிமையை நிறைவேற்றுவதிலும் கவனம் ஏற்படும். கிலாஃபத் அமைப்புடன் இணைந்து இருப்பதன் பரக்கத்துகளைப் பற்றிப்பிடிக்க இறை வாக்குறுதியில் இருந்தும் பயனம் பெறுவீர்கள்.

அல்லாஹ் இந்த கடமையை நிறைவேற்ற நமக்கு வாய்ப்பளிப்பானாக. அல்லாஹ் கூறியுள்ளான்.

வலா தமூத்துன்ன இல்லா வஅன்த்தும் முஸ்லிமூன் – கட்டுப்படாத வரை உங்களுக்கு மரணம் வரக்கூடாது. (3:103) வாழ்வும் மரணமும் எவரது அதிகாரத்திலும் இல்லை. அல்லாஹ் தான் விரும்புபவரை வாழ வைக்கிறான். அவன் விரும்புபவரை மரணிக்க வைக்கிறான். பிறகு இந்த வசனத்தின் இப்பகுதிக்கு பொருள் என்னவென்றால் நாம் எப்போதும் அல்லாஹ்வுடைய விருப்பத்திற்கேற்ப வாழ்வை அமைக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு மரணம் வந்தாலும் நாம் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக நமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்தி முயற்சி செய்யும் நிலையில் மரணம் வரும். ஏனெனில் நமது நிலைப்பு அதில்தான் உள்ளது. நாம் எப்போதும் அல்லாஹ்வுடைய கட்டளையின்படி அமல் செய்பவர்களாக இருக்க வேண்டும். மனிதன் தவறு செய்பவன் ஆவான். மனிதனிடம் எந்நிலையிலும் பலவீனமான நிலை ஏற்படலாம். எனவே நாம் எப்போதும் அவனது உதவியை கேட்டு வருவோம். பிறகு கட்டுப்படாத நிலையில் நமக்கு மரணம் வரவே வராது. நாம் தக்வாவை விட்டு விலகிவிட்ட நிலையில் நமக்கு மரணம் வரவே வராது.

பிறகு ஈமான், தக்வாவின் நிலையில் இறைவன் நமக்கு மரணத்தை வரச் செய்வான். நல்ல முடிவு கிடைப்பதற்காக துஆ செய்வதும் ஓர் உண்மையான முஃமினுக்கு மிகவும் அவசியமாகும். எனவே இதனை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதனைப் பற்றி கூறுகின்றார்கள்:

மரணம் எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் அது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகும். அறிவுள்ள மனிதன் எப்போதும் அதற்கு தயாராக இருப்பது கடமையாகும். எனவே இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். லா தமூத்துன்ன இல்லா வஅன்த்தும் முஸ்லிமூன் – முஸ்லிமாக இருக்கும் நிலையில் அன்றி மரணம் வர வேண்டாம். மனிதன் எப்போதும் தனது விவகாரத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளாமல், தனது இரு கடமைகளையும் (அல்லாஹ்வுக்குரிய கடமை, அடியானுக்குரிய கடமை) நிறைவேற்றாதவரை ஒன்றும் ஆவப்போவதில்லை.

மேலும் கூறுகின்றார்கள்: கடமைகளும் இரு வகைப்படும். 1) அல்லாஹ்வுக்குரிய கடமை 2) அடியார்களுக்குரிய கடமை. அடியானுக்கு செய்ய வேண்டிய கடமை இரு வகைப்படும். 1) அவர் உங்கள் மார்க்க சகோதரர். அவர் உங்கள் சகோதரரோ, மகனோ யாராக இருப்பினும் மார்க்க ரீதியாக உங்கள் சகோதரர். இன்னொரு வகை பொதுவான மனித குலத்தின் மீது உண்மையான அனுதாபம். அல்லாஹ்வுடைய கடமைகளுள் பெரியது அவனுக்கு இபாதத் செய்வதாகும். அந்த இபாதத் எந்த சொந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கக் கூடாது. மாறாக, நரகம், சொர்க்கம் எதுவும் இல்லா விட்டாலும் அவனுக்கு இபாதத் செய்ய வேண்டும். இயல்பான ஒரு அன்பு படைத்தவனின் மீது ஒரு படைக்கப்பட்ட பொருளுக்கு இருக்க வேண்டிய ஓர் அன்புடன் இபாதத் செய்ய வேண்டும். மனித குலத்தின் மீது காட்ட வேண்டிய அனுதாபம் குறித்து எனது வழி என்னவென்றால் எதுவரை எதிரிக்காகவும் துஆ செய்ய மாட்டோமோ அதுவரை முழுமையாக உள்ளம் தூய்மையடையாது.

இதுவே உண்மையான தக்வாவின்படி நடப்பவருக்கு தரப்பட்ட போதனையாகும். அல்லாஹ்வுக்குரிய உரிமையை நிறைவேற்றவும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டிருப்பவர்களிடம் ஓர் எதிர்பார்ப்பு வைத்துள்ளார்கள். அதாவது உள்ளம் எதிரிகள் விஷயத்தில் கூட தூய்மையாக இருக்க வேண்டும். அவர்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். பிறகு உங்களுக்கிடையில் எத்தனை அன்பு இருக்க வேண்டும்? ஒரே உயிராக நீங்கள் மாறி விட வேண்டும். **வலா தஃபர்ரகூ** – பிரிந்து போய் விடாதீர்கள் என்ற கட்டளை முஃமின்களுக்கு தரப்பட்டுள்ளது. தக்வாவின் எதிர்பார்ப்பு என்னவெனில் ஒவ்வொரு தனி நபரும் ஜமாஅத் பொறுப்பாளருடன் முழுமையாக கட்டுப்படுவதையும் ஒத்துழைப்பதையும் கொண்டவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு பொறுப்பாளரும் தமக்கு மேலுள்ள பொறுப்பாளருடன் அதே போன்று ஒத்துழைப்பும் கட்டுப்படுவதும் கொண்ட தொடர்பு வைத்திருக்க வேண்டும். கிளை அமைப்புகள் தமது வட்டத்தில் சுதந்திரமானவையாகும். கலீஃபாவின் கீழ் செயல்படக்கூடியவையாகும். எனினும் ஜமாஅத் அமைப்பின் கீழ் ஒவ்வொரு பொறுப்பாளரும், ஜமாஅத்தின் உறுப்பினர் என்ற வகையில் ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்பட்டவராவர். எனவே கண்டிப்பாக கட்டுப்பட வேண்டும். ஜமாஅத்தின் முன்னேற்றத்தை பார்க்க வேண்டும் எனில் உங்கள் தப்லீக் முயற்சிகளில் பலனை பார்க்க வேண்டும் எனில் தரப்பிய்யத்தின் தகுதியை உயர்த்த வேண்டும் என்றால் எல்லா இடத்திலும் ஒருயிர் ஆகி செயல்பட வேண்டும். எனவே தக்வாவில் அடியெடுத்து வைத்தவாறு கருத்து வேறுபாடு கொண்ட நிலையிலும் கூட துஆ செய்ய வேண்டும். பெரும் கருத்து வேறுபாடு இருப்பதாக தெரிய வந்தால் அதனை எனது கவனத்திற்கு கொண்டு வாருங்கள். ஜமாஅத்திற்கு எந்த வகையிலும் நஷ்டம் ஏற்படுத்தக்கூடும். எல்லா நிலையிலும், எல்லா மட்டத்திலும் கட்டுப்படுதல் தேவை. அதன் மூலம் அல்லாஹ்வுடைய நிஃமத்துகளுக்கு நன்றி உடையவர்களாக்கும். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் குறிப்பாக பொறுப்பாளர்களுக்கும் உயர்ந்த முன்மாதிரியை நிலைநாட்டுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. புதிதாக வருபவர்களுக்கு அவர்கள் முன்னுதாரணமாக இருப்பார்களாக. புதிதாக வருபவர்கள் தடுமாறுவதற்கு காரணமாகி விட வேண்டாம். ஆண்கள், பெண்கள் எல்லாருக்கும் இதில் சம பொறுப்பு உள்ளது. அவர்கள் தமக்குள் தூய மாற்றத்தை உருவாக்கவும் தவ்வாவை மேற்கொள்ளவும் முயற்சி செய்யுங்கள். அதேபோன்று தமது குழந்தைகளுக்கும் தர்பிய்யத் கொடுங்கள். இஸ்லாமிய போதனையில் சரியான முன்மாதிரியாக இருங்கள். ஓர் அஹ்மதி பையனுக்கும், அஹ்மதியல்லாத பையனுக்கும் இடையில் வித்தியாசம் தென்பட வேண்டும். பிறகு புதிய சந்ததிகள் அஹ்மதிய்யத்தாகிய உண்மை இஸ்லாத்தை பரப்புவதற்கு முழுமையாக முயற்சி செய்பவர்களாகி விடுவர். அதன் மூலம் இந்த நாட்டில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி தொடர்ந்து பரவிக் கொண்டே செல்லும். அல்லாஹ் எல்லாருக்கும் அதற்கு வாய்ப்பினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BOLOGNA, ITALY,**

**ON 16.04.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**